Koviloor Digital Library

3/3

திருவிளக்கு வழிபாடு



தொகுப்பாசிரியர் :
தவத்திரு. சுவாமி மதுரானந்தஜி அவர்கள்

வெளியிடுவோர் :

கிராம முன்னேற்றத் திட்டம்
விவேகானந்த கேந்திரம்
விவேகானந்தபுரம்
கன்னியாகுமரி - 629 702.

Acc.No. 34042
3-3-'25

Koviloor Digital Library

முதல் பதிப்பு	-	மார்ச்	1994	(15,000 பிரதிகள்)
இரண்டாம் பதிப்பு	-	ஜனவரி	1995	(15,000 பிரதிகள்)
மூன்றாம் பதிப்பு	-	(திருத்தியது) ஏப்ரல்	1996	(15,000 பிரதிகள்)
நான்காம் பதிப்பு	-	ஜுன்	1997	(15,000 பிரதிகள்)
ஐந்தாம்பதிப்பு	-	நவம்பர்	1998	(20,000 பிரதிகள்)
ஆறாம் பதிப்பு	-	மே	2000	(20,000 பிரதிகள்)

வெளியிடுவோர் :

கிராம முன்னேற்றத் திட்டம்
விவேகானந்த கேந்திரம்
விவேகானந்தபுரம்
கன்னியாகுமரி - 629 702.

உரிமை : பதிப்பாளருக்கே

விலை : ரூ. 2/-

அச்சிட்டோர் :

ஒரிஜினல் பிரிண்டிங் பிரஸ்,
83, மெயின் ரோடு,
கோவில்பட்டி - 628 501.

Koviloor Digital Library



முன்னுரை

அன்புள்ள சகோதரருக்கு / சகோதரிக்கு,

விவேகானந்த கேந்திரம் நடத்தும் திருவிளக்குப் பூஜையில் கலந்துகொள்ள முன்வந்திருக்கும் உங்களுக்கு கேந்திரத் தொண்டர்களின் சார்பில் வாழ்த்துக்களையும், பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கேந்திரம் கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை நினைவாலயம் என்ற உலகப் புகழ்பெற்ற பிரார்த்தனை மையத்தை அமைத்து நிர்வகித்து வருகிறது.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற விவேகானந்தரின் முக்கிய உபதேசத்தை நடைமுறைப்படுத்தும் வண்ணம் பல தொண்டுப் பணிகளையும் கேந்திரம் ஆற்றி வருகிறது. இதற்கென ஆயுட்காலத் தொண்டர்கள், கௌரவத் தொண்டர்கள், சமூகத் தொண்டர்கள், உள்ளூர் அன்பர்கள் இப்படிப் பலவிதமான தொண்டர்களுக்கு சமூகத் தொண்டர்கள் பயிற்சியும் அளித்து வருகிறது. இத்தொண்டர்கள் நாடு முழுவதும் சென்று சுயநலமற்ற உணர்வுடன் சுவாமி விவேகானந்தரின் வீர உரைகளைப் பிரச்சாரம் செய்தும் ஏழைகள், தாழ்த்தப்பட்டவர், துன்புற்றோர் ஆகியவர்களுக்கு உதவி செய்தும் வருகிறார்கள்.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், அந்தமான் போன்ற மாநிலங்களில் கல்விக் கூடங்களை அமைத்துப் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த தொண்டர்கள் அங்கு சென்று பணியாற்றும் வாய்ப்பினைக் கேந்திரம் ஏற்படுத்தித் தருகிறது. யோகப் பயிற்சி, யோகத்தின் மூலம் சிகிச்சை போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஆங்கிலம், தமிழ்,ஹிந்தி, மராட்டி, அஸ்ஸாமி ஆகிய மொழிகளில் பத்திரிகைகளையும், நூல்களையும்

Koviloor Digital Library

வெளியிட்டு வருகிறோம். கிராம முன்னேற்றத் திட்டங்கள் தமிழகம், பீஹார், காஷ்மீர், அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் செயல்பட்டு கல்வி, சத்துணவு, தொழில் பயிற்சி, மருத்துவ வசதி, கண்முகாம், நூலகம், இளைஞர் முகாம், பெண்கள் தொண்டு, குழந்தை நலன் பேணுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன.

இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் தமிழகத்தில் விஞ்ஞானத்தினால் கிடைக்கும் பயன்கள் கிராம மக்களைச் சென்றடைய உதவி புரிந்து வருகிறது.

நல்லொழுக்கம், எளிமை, மனிதாபிமானம், தீண்டாமை ஒழித்தல், வேறுபாடுகளைக் களைதல் ஆகியவற்றின் மூலம் இளைஞர்கள் தம்மையும் தூய்மைப்படுத்திக் கொண்டு சமுதாயத்திற்கும் தொண்டு புரிய ஒரு வித்தியாசமான வாழ்க்கை நெறியைக் கேந்திரம் அமைத்துத் தருகிறது.

சமுதாயத்தில் சமத்துவ உணர்வு, தீண்டாமையை ஒழித்தல், கூட்டுப்பிரார்த்தனை, ஒற்றுமை உணர்வு இவை தான் திருவிளக்குப் பூஜையின் லட்சியம். இவை உங்கள் மூலம் நிறைவேறுமாக.

இவண்,

பாரதத்தாயின் பணியில்,

விவேகானந்த கேந்திரம்,

கன்னியாகுமரி.



Koviloor Digital Library



திருவிளக்கு வழிபாடு

1. திருவிளக்கு வழிபாட்டின் சிறப்பு

திருவிளக்கு வழிபாடு பெரும்பாலும் பெண்களால் நடத்தப்படுகிறது. கன்னியரும், சுமங்கலிகளும் மாலைப் பொழுதில் திருவிளக்கேற்றி குடும்பத்தினருடன் இவ்வழிபாடு செய்தால் அஷ்டலெட்சுமிகளும் அங்கே குடிகொண்டு எல்லா நன்மைகளும் அருள்வர். வாழ்வில் தூய்மையும், தெய்வத்தன்மையும் பெருகும். சஞ்சலமும் வறுமையும் நீங்கும். சக்தியும், வளமையும் நிறையும். பேய், பிசாசு, பில்லி சூனியம் அணுகா.

ஊர்கள் தோறும் ஆலயங்களில் பெண்கள் ஒன்று சேர்ந்து ஆளுக்கொரு திருவிளக்கேற்றி வழிபாடு செய்தால் ஆன்மீக ஒருமைப்பாடும், அன்புணர்வும் வளரும். ஆலயத்தின் அருள் அலைகள் ஊரெங்கும் பரவும். அவ்வூரிலிருந்து தீயவை அனைத்தும் அகலும். அன்பும், அறனும், அமைதியும் நிலவி எல்லோரும் நல்லோராய் வாழ்ந்து எல்லா நன்மைகளும் பெறுவர்.

2. தேவையான பொருட்கள்

திருவிளக்கு, வாழை இலை, வெற்றிலை, பாக்கு, நிவேதனப் பொருட்கள் (பழம், அவல், பொரி, கற்கண்டு முதலியன) திருநீறு, குங்குமம், சந்தனம், உதிர்பூ, துளசி, கற்பூரம், ஊதுபத்தி வைக்கும் தட்டு, கற்பூரத் தட்டு, எண்ணெய், திரி, தீப்பெட்டி, ஒரு கப் (கலசம்) தீர்த்தம், அரிசி, மஞ்சள், ஊதுபத்தி முதலியன.

Koviloor Digital Library

எல்லோரும் சொல்க :

ஓம் ஸர்வே பவந்து ஸுகின :
ஸர்வே ஸந்து நிராமயா :
ஸர்வே பத்ராணி பஸ்யந்து
மா கச்சித் துக்கபாக் பவேத்

பொருள்

எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும். எல்லோரும் நோயில்லாமல் இருக்க வேண்டும். எல்லோரும் நன்மை பெறுக. யாரும் துன்புறாது இருக்கட்டும்.

3. கணபதி வாழ்த்து

1. ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

2. கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோகவிநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாதபங்கஜம்.

பொருள்

யானை முகத்தவரை, பூதக் கூட்டங்களால் வணங்கப்படுபவரை, விளாங்கனியின் சாரத்தை உண்பவரை உமையின் மைந்தனை, சோகத்தினை அழிப்பவரை, விக்னேசுவரரைப் பாதம் தொட்டு வணங்குகிறேன்.

4. தீபம் ஏற்றி ஆவாஹனம் செய்தல்

(எழுந்தருளச் செய்தல்)

கோவிலிலிருந்து தீபம் கொண்டு வந்து முதல் விளக்கை ஏற்றுக. அதனைத் தொடர்ந்து எல்லோரும் தீபம் ஏற்றவேண்டும்,

தீபம் ஏற்றும் போது
"ஓம் ஒளிவளர் விளக்கே போற்றி"

Koviloor Digital Library

என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். ஊது பத்தி கொளுத்தி வைக்கவும். பின் கீழ்வரும் பிரார்த்தனையைக் கேட்டுச் சொல்ல வேண்டும்.

" ஆதி பராசக்தி அம்பிகையே, நாங்கள் ஏற்றி வழிபடும் இந்தத் திருவிளக்கிலும் எங்கள் உள்ளத்திலும் எழுந்தருளி எங்களுக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் தந்தருள்வாயாக"

5. தேவி வாழ்த்து

ஸர்வ மங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே கௌரி
நாராயணி நமோஸ்துதே !

பொருள்

எல்லா மங்களங்களையும் தந்தருள்பவளே, மங்கள மயமானவளே, அனைத்தையும் தருபவளே, சரண்புகத் தகுந்தவளே, முக்கண்ணாளே, கௌரி, நாராயணி உனக்கு நமஸ்காரம்.

ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசானாம்
சக்தி பூதே சனாதனி
குணாச்ரயே குணமயே
நாராயணி நமோஸ்துதே !

பொருள்

படைப்பு, இருப்பு, அழித்தல் ஆகிய சக்திகளை உடையவளே, தொன்மையானவளே, நற்குணங்கள் உன்னையே வந்து சேருகின்றன. நற்குண மயமானவளே, நாராயணி, உனக்கு நமஸ்காரம்.

சரணாகத தீனார்த்த
பரித்ராண பராயணே
ஸர்வஸ்யார்த்தி ஹரே தேவி
நாராயணி நமோஸ்துதே !

Koviloor Digital Library

பொருள்

சரண்புகும் எளியவர்களின் துன்பத்தைத் தீர்ப்பவளே, அனைவரின் துன்பத்தையும் அழிப்பாயாக. தேவி நாராயணி, உனக்கு நமஸ்காரம்.

6. திருவிளக்கு அகவல்

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே சீதேவிப் பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷித் தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுத் திரிபோட்டு
குளம்போல எண்ணெய்விட்டு கோலமுடன் ஏற்றி
வைத்தேன்
ஏற்றினேன் திருவிளக்கு எந்தன் குடிவிளங்க
மாளிகையில் சோதியுள்ள மாதாவைக் கண்டு
மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறைய பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறைய பால்பசுவைத் தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரே உன்றன் தாளடியில் சரணடைந்தேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

7. திருவிளக்குப் பாடல்

(ரகுபதி ராகவ.........அல்லது நீலக்கடலின் ஓரத்தில்
மெட்டு)

மங்கலப் பொருளாம் விளக்கிதுவே
மாதர் ஏற்றும் விளக்கிதுவே
பொங்கும் மனத்தால் நித்தமுமே
போற்றி வணங்கும் விளக்கிதுவே

இருளை நீக்கும் விளக்கிதுவே
இன்பம் ஊட்டும் விளக்கிதுவே

Koviloor Digital Library

அருளைப் பெருக்கும் விளக்கிதுவே
அன்பை வளர்க்கும் விளக்கிதுவே

இல்லம் தன்னில் விளக்கினையே
என்றும் ஏற்றித் தொழுதிடவே
பல்வித நன்மை பெற்றிடலாம்
பாரில் சிறந்தே வாழ்திடலாம்

விளக்கில் ஏற்றும் ஜோதியினால்
விளங்காப் பொருளும் துலங்கிடுமே
விளக்கில் விளங்கும் ஜோதிதனை
விமலை என்றே உணர்ந்திடுவோம்.

8. கலச பூஜை

கலசத்திலுள்ள தண்ணீரில் அட்சதை (மஞ்சட் பொடி கலந்த அரிசி) இட்டு உள்ளங்கையால் கலசத்தை மூடிக் கொண்டு இம்மந்திரம் ஜெபிக்க வேண்டும்.

"கங்கேச யமுனே சைவ
கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி
ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு"

பொருள்

என் முன் இருக்கும் நீரில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி ஆகிய புண்ணிய நதிகள் எழுந்தருளட்டும்.

பின் தீர்த்தத்தை ஆசமனம் பண்ண வேண்டும். (சிறிதளவு உள்ளங்கையில் விட்டுப் பருக வேண்டும். பின் சிறிதளவு நீர் விட்டுக் கையைச் சுத்தம் செய்யவேண்டும்) அதன்பின் ஒரு மலரைத் தீர்த்தத்தில் நனைத்து, புஷ்பங்களிலும் நைவேத்தியத்திலும் நீர் தெளிக்க வேண்டும்.

பின் கீழ்வருமாறு சொல்லுக

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை,
அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, புவியடங்கக்

Koviloor Digital Library

காத்தாளை, அங்கையில் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
தீங்கில்லையே

9. அர்ச்சனை செய்யும் முறை

ஆள்காட்டி விரல் தவிர இதர விரல்களால் குங்குமத்தையும், மலர்களையும் எடுத்து இடதுகை நெஞ்சோடு சேர்த்து வைத்து விளக்கின் அடிப்பாகத்தை அம்பிகையின் பாதார விந்தங்களாகப் ப்ாவித்து அர்ச்சனை செய்ய வேண்டும். முதலில் குங்குமத்தால் 54 அர்ச்சனைகளும் பின் கன்யாகுமார்யை நம: என்று தொடங்கி 54 அர்ச்சனைகள் மலர்களாலும் அவ்விதம் மொத்தம் 108 அர்ச்சனைகள் செய்ய வேண்டும்.

(ஒவ்வொரு மந்திரத்திலும் முதலில் 'ஓம்' என்று சேர்த்துக் கொள்ளவும்)

	அர்ச்சனை 108	பொருள்
1	ஓம் சிவாயை நம :	மங்கள வடிவினள்
2	ஓம் சிவசக்த்யை நம :	சிவனில் சக்தி
3	இச்சா சக்த்யை நம :	மன உறுதி என்னும் சக்தி
4	க்ரியா சக்த்யை நம :	செயல்படும் சக்தி
5	ஸ்வர்ண ஸ்வரூபிண்யை நம :	பொன்னிறம் உடையவள்
6	ஜ்யோதி லக்ஷ்ம்யை நம :	ஒளியும், அழகும் உடையவள்
7	தீப லக்ஷ்ம்யை நம :	தீபத்தில் அழகாய் ஒளிர்பவள்
8	மஹா லக்ஷ்ம்யை நம :	பெரியவளாகிய திருமகள்
9	தன லக்ஷ்ம்யை நம :	செல்வத் திருமகள்
10	தான்ய லக்ஷ்ம்யை நம :	தானியங்களை உடைய திருமகள்
11	தைர்ய லக்ஷ்ம்யை நம :	அஞ்சாமையை உடைய திருமகள்

Koviloor Digital Library

12 ஓம் வீர லக்ஷ்ம்யை நம :	வீரத்தை உடைய திருமகள்
13 விஜய லக்ஷ்ம்யை நம :	வெற்றித் திருமகள்
14 வித்யா லக்ஷ்ம்யை நம :	கல்வித் திருமகள்
15 ஜய லக்ஷ்ம்யை நம :	வெற்றியும் அழகும் உடையவள்
16 வர லக்ஷ்ம்யை நம :	வரம் தரும் திருமகள்
17 கஜ லக்ஷ்ம்யை நம :	யானையை அருகில் கொண்ட திருமகள்
18 காம வல்யை நம :	அன்புக் கொடி
19 காமாக்ஷிஸுந்தர்யை நம :	அன்பு மிகுந்த பார்வையை உடையவள் அழகியவள்
20 சுப லக்ஷ்ம்யை நம :	சுபத்தைத் தரும் திருமகள்
21 ராஜ லக்ஷ்ம்யை நம :	அரசாட்சி செய்யும் திருமகள்
22 க்ருஹ லக்ஷ்ம்யை நம :	இல்லத்திற்கு அழகாய் விளங்கும் திருமகள்
23 ஸித்த லக்ஷ்ம்யை நம :	வேண்டியவை அனைத்தையும் பெற்ற திருமகள்
24 ஸீதா லக்ஷ்ம்யை நம :	சீதையாகிய திருமகள்
25 ஸர்வ மங்கள காரிண்யை நம :	நல்லன அனைத்தையும் செய்பவள்
26 ஸர்வ துக்க நிவாரிண்யை நம :	துக்கம் அனைத்தையும் போக்குபவள்
27 ஸர்வாங்க ஸுந்தர்யை நம :	உடல் முழுவதும் அழகு மிகுந்தவள்
28 ஸெளபாக்ய லக்ஷ்ம்யை நம :	நல்ல பாக்கியத்தை உடைய திருமகள்
29 ஆதி லக்ஷ்ம்யை நம :	பழமையான திருமகள்
30 ஸந்தான லக்ஷ்ம்யை நம :	குழந்தைகளைத் தரும் திருமகள்
31 ஆனந்த ஸ்வரூபிண்யை நம :	மகிழ்ச்சியே தன் வடிவமாகப் பெற்றவள்
32 அகிலாண்ட நாயகியாயை நம :	படைப்பு முழுவதற்கும் தலைவியானவள்

Koviloor Digital Library

33 பிரம்மாண்ட நாயகியாயை நம : பெரிய படைப்பின் தலைவி
34 ஸுரப்யை நம : நல்லனவற்றை சுரந்து தருபவள்
35 பரமாத்மிகாயை நம : அனைத்தும் தானே ஆகிய பரம்பொருள்
36 பத்மாலயாயை நம : தாமரையை இருப்பிட மாகக் கொண்டவள்
37 பத்மாயை நம : தாமரை வடிவாகியவள்
38 தன்யாயை நம : நன்றி உள்ளவள், வேண்டியது அனைத்தும் உடையவள்
39 ஹிரண்மய்யை நம : பொன் மயமானவள்
40 நித்யபுஷ்டாயை நம : எப்போதும் நிறைந்து இருப்பவள்
41 தீப்தாயை நம : ஒளிர்பவள்
42 வஸுதாயை நம : உயிரைத் தருபவள்
43 வஸுதாரிண்யை நம : உயிரைத் தாங்கி நிற்பவள்
44 கமலாயை நம : தாமரையில் இருப்பவள்
45 காந்தாயை நம : கவர்ச்சி மிக்கவள்
46 அனுக்ரஹப்ரதாயை நம : அருள் தருபவள்
47 அனகாயை நம : பாவம் அற்றவள்
48 ஹரிவல்லபாயை நம : விஷ்ணுவின் மனைவி
49 அசோகாயை நம : சோகம் அற்றவள்
50 அம்ருதாயை நம : அமுத மயமானவள்
51 துர்க்காயை நம : வெல்லுதற்கு அரியவள்
52 நாராயண்யை நம : மனிதனுக்கு நல்வழி காட்டுபவள்
53 மங்கல்யாயை நம : மங்கள மயமானவள்
54 கிருஷ்ணாயை நம : கண்ணனின் வடிவாகியவள் கவர்ந்து இழுப்பவள்
55 கன்யாகுமார்யை நம : கன்னியாகவும் குமரியாக வும் இருப்பவள்
56 ப்ரஸன்னாயை நம : மன மகிழ்ச்சி உடையவள்
57 கீர்த்யை நம : புகழ் உடையவள்

Koviloor Digital Library

58	ஓம் ஸ்ரீயை நம :	செல்வம் உடையவள்
59	மோஹ நாசின்யை நம :	குழப்பத்தைப் போக்குபவள்
60	அபம்ருத்யு நாசின்யை நம :	காலம் தவறிய சாவை நாசம் செய்பவள்
61	வ்யாதி நாசின்யை நம :	நோய்களைத் தீர்ப்பவள்
62	தாரித்ரிய நாசின்யை நம :	வறுமையைத் தீர்ப்பவள்
63	பயநாசின்யை நம :	அச்சத்தைப் போக்குபவள்
64	சரண்யாயை நம :	சரண்புகத் தகுந்தவள்
65	ஆரோக்யதாயை நம :	நோயற்ற நிலையை நல்குபவள்
66	ஸரஸ்வத்யை நம :	கலைமகள் வடிவினள்
67	மஹாமாயாயை நம :	பெரிய மாயை வடிவிலானவள்
68	புஸ்தக ஹஸ்தாயை நம :	புத்தகத்தைக் கையில் உடையவள்
69	ஜ்ஞான முத்ராயை நம :	ஞான முத்திரையை ஏற்றவள்
70	ராமாயை நம :	மனத்தை மகிழ்விப்பவள்
71	விமலாயை நம :	குறைகள் அற்றவள்
72	வைஷ்ணவ்யை நம :	விஷ்ணுவின் சக்தியானவள்
73	ஸாவித்ர்யை நம :	ஒளியை உடையவள்
74	வாக்தேவ்யை நம :	வாக்குக்குத் தேவதை
75	பாரத்யை நம :	கலைமகளானவள் / பாரதமாதாவானவள்
76	கோவிந்த ரூபிண்யை நம :	கோவிந்தனின் வடிவினள்
77	சுபத்ராயை நம :	நல்லவள்
78	த்ரிகுணாயை நம :	முக்குணங்களை உடையவள்
79	அம்பிகாயை நம :	தாயானவள்
80	நிரஞ்ஜனாயை நம :	மாசற்றவள்
81	நித்யாயை நம :	என்றும் உள்ளவள்
82	கோமத்யை நம :	கோமதி என்ற அம்பாள் வடிவினள் / நதி வடிவினள்

Koviloor Digital Library

83	ஓம் மஹாபலாயை நம :	பெரும் பலம் உடையவள்
84	ஹம்ஸாஸனாயை நம :	அன்ன வாகனம் உடையவள்
85	வேதமாத்ரே நம :	வேதமாகிய தாய்
86	சாரதாயை நம :	குளிர்விப்பவள் / கலைமகள்
87	ஸ்ரீ மாத்ரே நம :	நல்ல அன்னை
88	சர்வாபரண பூஷிதாயை நம :	அனைத்து அணிகளையும் பூண்டவள்
89	மஹாசக்த்யை நம :	பெரிய சக்தி
90	பவான்யை நம :	பவனாகிய சிவனின் மனைவி
91	பக்திப்ரியாயை நம :	பக்தியை விரும்புபவள்
92	சாம்பவ்யை நம :	நல்லோர்களால் வணங்கப்படுபவள்
93	நிர்மலாயை நம :	அழுக்கும் குறையும் அற்றவள்
94	சாந்தாயை நம :	அமைதி உடையவள்
95	நித்ய முக்தாயை நம :	எப்போதும் முக்தி வடிவில் இருப்பவள்
96	நிஷ்களங்காயை நம :	களங்கமற்றவள்
97	பாபநாசின்யை நம :	பாவத்தை நாசம் செய்பவள்
98	பேதநாசின்யை நம :	மன வேறுபாடுகளை நாசம் செய்பவள்
99	ஸுகப்ரதாயை நம :	சுகத்தைத் தருபவள்
100	ஸர்வேச்வர்யை நம :	அனைத்திற்கும் ஈஸ்வரி
101	ஸர்வமந்த்ர ஸ்வருபிண்யை நம :	எல்லா மந்திரங்களின் வடிவிலும் இருப்பவள்
102	மனோன்மன்யை நம :	மனத்துக்குள் ஒளிரும் மனம் உடையவள்
103	மஹேச்வர்யை நம :	பெரிய ஈஸ்வரி
104	கல்யாண்யை நம :	மங்கள வடிவிலானவள்
105	ராஜராஜேச்வர்யை நம :	ராஜாதி ராஜனுக்கும் ஈஸ்வரி
106	பாலாயை நம :	பாலா என்ற பெயரில் குமரி முனையில் விளங்குபவள்

Koviloor Digital Library

107 ஓம் தர்மவர்த்தின்யை
நம : அறம் வளர்ப்பவள்

108 ஸ்ரீ லலிதாம்பிகாயை
நம : மென்மையான தாய்

பின் பூக்கள் எடுத்து நெஞ்சுக்கு நேர் வைத்து :
'ஓம் நாநாவித மந்த்ர பரிமள பத்ர
புஷ்பாணி சமர்ப்பயாமி' என்று சொல்லி சமர்ப்பிக்கவும்.

பொருள்

பலவிதமான மண மலர்களையும், இலைகளையும் மந்திரத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

10. போற்றுதல் முறை

எல்லோரும் இருகரம் கூப்பி திருவிளக்கில் சுடர் விடும் ஒளியை நோக்கி அம்பிகையை மனமார நினைத்து நூற்றெட்டு போற்றிகளை ஓத வேண்டும். கண்கள் திருவிளக்கிலும் மனம் அம்பிகையிலும் நிலை பெற்றிருக்க வேண்டும்.

(ஒவ்வொரு மந்திரத்தின் முடிவில் 'போற்றி' என்று சேர்த்துக் கொள்ளவும்)

1 பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
2 போகமும் திருவும் புணர்ப்பாய்
3 முற்றறிவு ஒளியாய் மிளர்ந்தாய்
4 மூவுலகும் நிறைந்திருந்தாய்
5 வரம்பில் இன்பமாய் வளர்ந்திருந்தாய்
6 இயற்கையாய் அறிவொளி ஆனாய்
7 ஈரேழுலகம் ஈன்றாய்
8 பிறர்வயமாகாப் பெரியோய்
9 பேரின்பப் பெருக்காய்ப் பொலிந்தாய்
10 பேரருட் கடலாம் பொருளே
11 முடிவில் ஆற்றல் உடையாய்
12 மூவுலகும் தொழும் மூத்தோய்
13 அளவிலாச் செல்வம் தருவாய்

Koviloor Digital Library

14 ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி
15 ஓம் என்னும் பொருளாய் உள்ளாய்
16 இருள் கெடுத்து இன்பருள் எந்தாய்
17 மங்கள நாயகி மாமணீ
18 வளமை நல்கும் வல்லியே
19 அறம் வளர் நாயகி அம்மையே
20 மின்ஒளி அம்மையாம் விளக்கே
21 மின் ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய்
22 தையல் நாயகித் தாயே
23 தொண்டர் அகத்தமர் தூமணி
24 முக்கட்சுடரின் முதல்வீ
25 ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய்
26 சூளாமணியே சுடரொளீ
27 இருள் ஒழித்து இன்பம் ஈவோய்
28 அருள் பொழிந்து எம்மை ஆள்வோய்
29 அறிவினுக்கு அறிவாய் ஆனாய்
30 இல்லக விளக்காம் இறைவீ
31 சுடரே விளக்காம் தூயோய்
32 இடரைக் களையும் இயல்பினாய்
33 எரிசுடராய் நின்ற இறைவீ
34 ஞானச்சுடர் விளக்காய் நின்றாய்
35 அருமறைப் பொருளாம் ஆதி
36 தூண்டு சுடரனைய ஜோதி
37 ஜோதியே போற்றிச் சுடரே
38 ஓதும் உள் ஒளி விளக்கே
39 இருள் கெடுக்கும் இல்லக விளக்கே
40 சொல்லக விளக்காம் ஜோதி
41 பலர்காண் பல்லக விளக்கே
42 நல்லக நமசிவாய விளக்கே
43 உவப்பிலா ஒளிவளர் விளக்கே
44 உணர்வு சூழ் கடந்ததோர் விளக்கே
45 உடம்பெனும் மனையக விளக்கே
46 உள்ளத்தகழி விளக்கே

Koviloor Digital Library

47 மடம்படும் உணர்நெய் விளக்கே போற்றி
48 உயிரெனும் திரிமயக்கு விளக்கே
49 இடம்படும் ஞானத்தீ விளக்கே
50 நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே
51 ஆதியாய் நடுவுமாகும் விளக்கே
52 அளவிலா அளவுமாகும் விளக்கே
53 ஜோதியாய் உணர்வுமாகும் விளக்கே
54 தில்லைப் பொதுநட விளக்கே
55 கருணையே உருவாம் விளக்கே
56 கற்பனை கடந்த ஜோதி
57 அற்புதக் கோல விளக்கே
58 அருமறைச் சிரத்து விளக்கே
59 சிற்பர வியோம விளக்கே
60 பொற்புடன் நடஞ்செய் விளக்கே
61 உள்ளத்திருளை ஒழிப்பாய்
62 கள்ளப்புலனைக் கரைப்பாய்
63 உருகுவோர் உள்ளத்து ஒளியே
64 பெருகு அருள்சுரக்கும் பெருமா
65 இருள்சேர் இருவினை எறிவாய்
66 அருவே உருவே அருவுரு
67 நந்தா விளக்கே நாயகியே
68 செந்தாமரைத்தாய் தந்தாய்
69 தீபமங்கள ஜோதி
70 மதிப்பவர் மனமணி விளக்கே
71 பாகம் பிரியா பராபரை
72 ஆகம முடிமேல் அமர்ந்தாய்
73 ஏகமாய் நடஞ்செய் எம்மான்
74 ஊழி ஊழி உள்ளோய்
75 ஆழியான் காணா அடியோய்
76 ஆதியும் அந்தமும் அற்றாய்
77 அந்தமில் இன்பம் அருள்வோய்
78 முந்தைய வினையை முடிப்போய்
79 பொங்கும் கீர்த்திப் பூரணீ

Koviloor Digital Library

80 தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி
81 அருளே உருவாய் அமைந்தோய்
82 இருநில மக்கள் இறைவீ
83 குருவென ஞானம் கொடுப்பாய்
84 ஆறுதல் எமக்கிங்கு அளிப்போய்
85 தீதெல்லாம் தீர்க்கும் திருவே
86 பக்தியில் ஆழ்ந்த பரமே
87 எத்திக்கும் துதி எந்தாய்
88 அஞ்சலென்றருளும் அன்பே
89 தஞ்சமென்றவரைச் சார்வோய்
90 ஓதுவார் அகத்துறை ஒளியே
91 ஓங்காரத்துள்ளொளி விளக்கே
92 எல்லா உலகமும் ஆனாய்
93 பொல்லா வினைகள் அறுப்பாய்
94 புகழ்சேவடி என்மேல் வைத்தாய்
95 செல்வாய செல்வம் தருவாய்
96 பூங்கழல் விளக்கே போற்றி
97 உலகம் உவப்புற வாழ்வருள்
98 உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள்
99 செல்வம் கல்வி சிறப்பருள்
100 நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய்
101 விளக்கிட்டார்க்கு மெய்நெறி விளக்குவாய்
102 நலம் எல்லாம் உயிர்க்கு நல்குக
103 தாயே நின்னருள் தருவாய்
104 தூ யநின் திருவடி தொழுதனம்
105 போற்றி என்பார் அமரர் விளக்கே
106 போற்றி என்பார் மனிதர் விளக்கே
107 போற்றி என் அன்புபொலி விளக்கே
108 போற்றி போற்றி திருவிளக்கே

11. நிவேத்யம்

நிவேத்யப் பொருள்களை அம்பிகைக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டும். எல்லோரும் சொல்க.

Koviloor Digital Library

ஓம் ப்ரம்மார்ப்பணம் ப்ரம்மஹவிர்
ப்ரம்மாக்னௌ ப்ரம்மணாஹுதம்
ப்ரம்மைவ தேன கந்தவ்யம்
ப்ரம்மகர்ம சமாதினா

பொருள்

அர்ப்பணம் செய்யும் செயல், பொருள், அக்னி, நடைமுறை அனைத்தும் பரம்பொருள் மயம் / அதனால் பரம்பொருளே அடையப்படுகிறது / செயலும் அதன் நிறைவும் பரம்பொருளே.

பின் கீழ்வரும் ஆறு மந்திரங்களைச் சொல்லி ஆறு தடவை நைவேத்யத்தை வலது கைவிரல்களால் எடுப்பது போலவும் தேவிக்கு ஊட்டுவது போலவும் சைகை காட்டவும்.

ஓம் ப்ராணாய ஸ்வாஹா
ஓம் அபானாய ஸ்வாஹா
ஓம் வ்யானாய ஸ்வாஹா
ஓம் உதானாய ஸ்வாஹா
ஓம் ஸமானாய ஸ்வாஹா
ஓம் பிரம்மணே ஸ்வாஹா

பொருள்

உடலில் ஐந்து விதமாக இயங்கும் பிராண சக்திகளை தேவிக்கு அர்ப்பணிக்கிறேன்.

12. பாட்டு

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மஹமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்த வள்ளி தெய்வானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிகோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
(அம்மா கற்பூர.....)
கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாட வேண்டும்

Koviloor Digital Library

பண்ணமைக்கும் நாவுனையே பாட வேண்டும்
பக்தியோடு கையுனையே கூட வேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆக வேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மக்களுடைய குறைகளை நீ தீருமம்மா
(அம்மா கற்பூர ......)

நெற்றியினில் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினில் உன் திருநாமம் நிலவ வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்
சுற்றமெல்லாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா
(அம்மா கற்பூர......)

13. தீபாராதனை

எல்லோரும் நமஸ்காரம் செய்து எழுந்து நின்று தீபாராதனைக்குத் தயாராகுக. திருவிளக்கிற்கு மூன்று முறை கற்பூர ஆரத்தி காண்பிக்க வேண்டும். கற்பூரம் காட்டும்போது எல்லோரும் சேர்ந்து சொல்லுக.

திங்களில் ஜோதி நீ தினகரன் ஜோதி நீ
அங்கியில் ஜோதி நீ அனைத்திலும் ஜோதி நீ
எங்களுள் ஜோதி நீ ஈஸ்வர ஜோதி நீ
கங்கிலா ஜோதி நீ கற்பூர ஜோதியே.

பின் திருவிளக்கின் முன் கற்பூர தீபத்தை வைத்து மலரால் வலம் சுற்றி திருவிளக்கிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கற்பூர தீபத்தைத் தொட்டு கண்ணிலும், தலையிலும், நெஞ்சிலும் வைத்துக் கொள்ள வேண்டும். பக்தர்கள் கற்பூர தீபத்தைத் தொட்டுக் கொள்ள நின்ற இடத்தில் நின்றவாறே கொடுக்க வேண்டும்.

பின் நமஸ்காரம் செய்து எழுந்து நின்று வலம்வரத் தயாராக வேண்டும்.

Koviloor Digital Library

14. திருவிளக்குகளை வலம் வருதல்

எல்லோருமாக தேவிநாமம் கைதட்டிப் பாடிக் கொண்டு மூன்று முறை வலம் வருக.

நாமம் :

ஜெய் ஜெய் தேவி
ஜெய் ஸ்ரீ தேவி

அதன்பின் அமர்ந்து எல்லோரும் சேர்ந்து சொல்லுக : மந்த்ர ஹீனம் க்ரியா ஹீனம் பக்தி ஹீனம் மஹேஸ்வரி யத் பூஜிதம் மயா தேவி பரிபூர்ணம் ததஸ்துதே !

தேவீ, நாங்கள் செய்த பூஜையில் மந்திரம், நடைமுறை, பக்தி இவற்றில் குறைகள் இருந்தால் அவற்றை நிறைவு செய்வீர்களாக.

பின் நமஸ்காரம் செய்து அமர்ந்து மங்களம் பாடி நிறைவு செய்க.

15. மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் - தத்தாத்ரேயாய மங்களம்
கஜானனாய மங்களம் - ஷடானனாய மங்களம்
ரகுவராய மங்களம் - வேணு கிருஷ்ண மங்களம்
ஸீதாராம மங்களம் - ராதாகிருஷ்ண மங்களம்
ராமகிருஷ்ண மங்களம் - சாரதைக்கும் மங்களம்
ஆனந்த மங்களம் - விவேகானந்த மங்களம்
அன்னை அன்னை அன்னை அன்னை அன்பினுக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சிவைக்கு மங்களம்
நாம கீர்த்தனம் பரந்து நானிலம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெல்லாம் விளங்கவும்
ஞான தீபமேற்றி என்றும் நாம கீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம் கொண்டாடுவோம்.

16. பிரார்த்தனை

கண்களை மூடி இருதயத் தாமரைமேல் அம்பிகை வீற்றிருப்பதைக் காணுக. அமைதியாக கீழ்வரும் பிரார்த் தனையைக் கேட்டுச் சொல்லுக.

Koviloor Digital Library

ஓம் ஸர்வே பவந்து ஸுகின :
ஸர்வே ஸந்து நிராமயா :
ஸர்வே பத்ராணி பஸ்யந்து
மா கச்சித் துக்கபாக் பவேத்

எல்லோரும் சுகமாக வாழ்க ! எல்லோரும் நோயின்றி வாழ்க ! எல்லோருக்கும் மங்களம் உண்டாகுக ! ஒருவரும் துன்புறா திருக்க வேண்டும் !

ஓம் அஸதோ மா ஸத் கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய

பொய்யிலிருந்து என்னை மெய்மைக்கு வழி நடத்து வாயாக. அஞ்ஞான இருளிலிருந்து ஞான ஜோதிக்கு வழி நடத்துவாயாக. மரணத்திலிருந்து மரணமில்லாப் பெரு வாழ்வுக்கு அழைத்துச் செல்வாயாக.

ஓம் பூர்ணமத : பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவாவசிஷ்யதே !
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி

பொருள்

அங்கும் பூரணம், இங்கும் பூரணம், பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தபின் பூரணமே எஞ்சி உள்ளது.

இரண்டு நிமிடம் தியான்ம் செய்க 'ஹரி ஓம் தத்ஸத்' எனச் சொல்லி தியானம் நிறைவு செய்க.

பின் சுடர்விடும் தீபங்களை மலரால் நிறுத்தி பிரசாதங்களை அவரவர்களே எடுத்துக் கொள்ளவும். குங்குமத்தை கவனமாக எடுத்துச் சென்று தினமும் பொட்டு இட்டுக் கொள்ளவும், சர்வ மங்களங்களும் உண்டாகும்.

(அர்ச்சனை செய்த மலர்களைக் காலால் மிதிக்காமல் நீர்நிலைகளிலோ சுத்தமான இடங்களிலோ போடவும். தீர்த்த ஜலத்தை கால்மிதிபடாத இடத்தில் கொட்டவும்.)

Koviloor Digital Library

திருவிளக்கு வழிபாட்டு விளக்கம்

1. திருவிளக்கை தேவியாக வழிபடுவதால் தேவி அல்லது சக்தியின் மகிமையை முதலில் சிறிது சிந்திப்போம்; இந்து சமயமாகிய சனாதன தருமத்தில் ஆறு முக்கியமான கடவுள் வழிபாட்டு முறைகளுள்ளன. அவைகளை ஷண்மதம் அல்லது அறு சமயம் என்பர். அவையாவன: சைவம் (சிவ வழிபாடு) வைணவம் (விஷ்ணு. வழிபாடு) காணாபத்யம் (கணபதி வழிபாடு) கௌமாரம் (முருகன் வழிபாடு) சாக்தம் (தேவி வழிபாடு) சௌரம் (சூரிய வழிபாடு). அவைகளில் இறைவனைத் தாயாக வழிபடுகின்ற வழக்கம் தொன்று தொட்டே உள்ளது. உலகில் தாயைப்போல் நம்மிடம் அன்பும் பரிவும் காட்டுபவர் வேறு ஒருவர் இல்லை. ஆதலால் தாயை நினைக்கும் போது நம் மனம் எளிதில் நெகிழ்ந்து தாயின் வடிவில் ஒன்றுபட்டு விடுகிறது. தாயின் பெயர் கூறிய உடனேயே நம் உள்ளம் உருகுகிறது. இது உலகியல் பாசம் ஆகும். இந்த நேசபாசத்தை கடவுள் பால் திருப்புவதற்காக கடவுளைத் தாய்வடிவில் அல்லது பெண் வடிவில் நம் முன்னோர்கள் கண்டனர். கடவுள் தாய்க்கும் தாயாக உலகு அனைத்திற்கும் தாயாக இருக்கின்றார் என்ற உண்மையை நாம் தற்போது உணரவில்லை. ஆண்டவன் நம்மீது எல்லை இல்லாத அன்பும் அருளும் உடையவர் என்பதை நாம் உணராமல் அவரை மறந்து உலகபந்தங்களில் மதிமயங்கித் திரிகிறோம். நம்முடைய மனத்தை எளிதில் இறைவன்பால் திருப்புவதற்குத் தாய் வடிவான தேவி வழிபாடு மிகவும் துணைசெய்யும். மானைக் காட்டி மானைப் பிடிக்கும் தன்மை போல தாயன்பை உணர்ந்து உலகத்தாயாகிய தேவிபால் பக்தியை எளிதில் வளர்த்து விடலாம்.

தேவியும் தேவனும் இரண்டல்ல. இறைவனை ஆணாகவும் (தேவனாக), பெண்ணாகவும் (தேவி), அலியாகவும், அருவுருவாகவும், அருவாகவும், உருவாகவும்

Koviloor Digital Library

எப்படியும் எண்ணி வழிபடலாம். ஆனால் தேவி வடிவில் வழிபடுவது மிக எளிதான, இனிதான முறை.

தேவி வழிபாட்டிலும் தேவியின் பல்வேறு திருவுருவங்களைப் பாவித்து பூசித்து வருகின்றனர். அவைகளில் துர்கா, காளி, லட்சுமி, ஸரஸ்வதி, ராஜராஜேஸ்வரி, மாரியம்மன் முதலியன முக்கிய வடிவங்களாம்,

துர்கா தேவியின் திருவுருவம் வீரத்திற்கும், ஆற்றலுக்கும், அஞ்சாமைக்கும், அடையாளமாய் விளங்குவது. சிங்கம் அல்லது வேங்கையை வாகனமாகக் கொண்டவள். கையில் திரிசூலம், வாள் ஏந்தியமூர்த்தி, பத்துத் திசைகளையும் காப்பவள் என்பதற்கடையாளமாக படைகள் தாங்கிய பத்துக்கரங்களை உடையவள். துர்கா என்றசொல்லை துர்+கா என்று பிரிக்கலாம். ஆபத்திலும், துன்பத்திலும் நம்மைக் காத்து வெற்றியருள்பவள் என்று பொருள். அவள் நல்லவர்களுக்கு இடையூறு செய்த மகிஷாசுரன் என்ற கொடியவனை அழித்ததினால் அவளுக்கு 'மகிஷா சுரமர்த்தினி' என்று பெயருண்டு. இது கதை. இதன் உட்பொருள் என்னவெனில், நமது உள்ளத்திலுள்ள காமம், கோபம், மயக்கம் முதலிய தீய விலங்கியல்பின் வடிவமே மகிஷன். அவளை வழிபட்டால் நம்மீது கருணை கொண்டு, தேவி அதனை அழித்து நம்மைக் காப்பாள்.

லக்ஷ்மி என்பது அம்பிகையின் மற்றொரு திருவுருவம். விஷ்ணு சக்தி அல்லது வைஷ்ணவியாகிய லக்ஷ்மி நமக்கு எல்லாச் செல்வங்களையும், வளமையையும், அழகையும் அளித்துக் காப்பவள் ஆகும். அவளைத் திருமகள் என்பர். செந்தாமரைமேல் வீற்றிருப்பாள்.

ஸரஸ்வதி என்பது ப்ரம்மசக்தி அல்லது ப்ராம்மியின் திருவுருவம். எல்லாக் கலைகளையும் ஞானத்தையும் அளிப்பவள். வாக்கிற்கு அதிதேவதை. அவள் வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள். நான்கு கைகளையுடையவள். இரண்டு கைகளில் வீணையை மீட்டிக் கொண்டு, ஒரு கையில் புத்தகமும் இன்னொரு கையில் படிக மாலையும் ஏந்தியவள்.

Koviloor Digital Library

நவராத்ரி விழாக்காலத்தில் இம்மூன்று சக்திகளையும் வழிபட்டு வணங்குவர். இதனால் வீரம், செல்வம், கல்வி ஆகிய பேறுகளை எளிதில் பெறலாகும்.

வெய்ய மகிடனை அழிக்க வீர துர்க்கையானாள்
செய்ய திருவாய்த் தோன்றி செல்வச் செழிப்பைத் தருவாள்

மெய்யாம் கலைகளை அருள வெள்ளை வாணியாய் வருவாள்
உய்யும் அருளைச் சுரக்கும் சக்தி ஒன்றே ஒன்றே.

2. இத்தகைய பராசக்தியை நமது தாய்மார்கள் திருவிளக்கில் ஆவாகனம் பண்ணி வழிபடுகின்றனர். திருவிளக்கின் தத்துவம் என்ன என்பதைச் சிறிது பார்போம். 'விளக்கு' என்ற செந்தமிழ்ச் சொல் இருளை நீக்கி, பொருட்கள் நமது கண்களுக்கு விளங்குமாறு செய்கின்ற தீச்சுடர் என்று பொருள்படும். இல்லங்களில் ஏற்றப்படும் விளக்கானது இல்லின் அகத்தேயுள்ள இருட்டினை நீக்கி ஒளியையும் அழகையும் தருகிறது. அத்தகைய விளக்கினை மங்கலப்பொருளாக, மகாலெட்சுமியாக, சிவசக்தியாகக் கருதி வழிபடுவது தொன்று தொட்டு வருகின்ற நமது மரபாகும். விளக்கொளியைத் தெய்வமாகக் கருதி வழிபட்டால் புறவிருளோடு அகவிருளும் நீங்கும். அகவிருளாவது மனத்திலுள்ள அஞ்ஞானம் அல்லது அறியாமை, அறியாமை யாவது, இறைவன் யார், தான் யார், உலகம் எவ்வாறு தோன்றி இயங்கி ஒடுங்குகிறதென்று நாம் உணராதவாறு நமது அறிவை மறைக்கின்ற மாயாசக்தியாம். இதனை மும்மலம் என்று வேதாகமங்கள் விளம்பும். அனாதியாகவே செம்பிற்களிம்பு போல உயிர்களைப் பற்றிய இவ்வறியாமை இருளிலிருந்து 'யான்' 'எனது' என்னும் அகந்தை மமதைகளும் அவா, வெகுளி, உலோபம் முதலிய தீயகுணங்களும் முளைத்து, நம்மைப் பாவச் செயல்களைச் செய்யத் தூண்டுகின்றன. பாவச்செயல்களின் பயன் பெருந்துன்ப மாகும், இத்தகைய கொடிய விளைவுக்கு வித்தாக அமைகின்ற அறியாமை இருளை அடியோடு ஒழிக்க வல்லவை

Koviloor Digital Library

ஆண்டவனது திருநாமங்களாகும். இவ்வுண்மையை கீழ்க் கண்ட அப்பர் சுவாமிகளின் தேவாரப் பாசுரம் சுருக்க மாகக் கூறுகின்றது.

'இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே!'

3. இனி திருவிளக்கின் அமைப்பினைச் சிறிது பார்ப்போம்.

குத்துவிளக்கின் அடிப்பாகமாகிய பீடபாகம் மலர்ந்த தாமரைப்பூப்போல் அகன்று வட்டமானதாக இருப்பதால் தாமரை மலர் மேலுறையும் பிரம்மதேவனைக் குறிக்கும்.

கீழ்த்தண்டுப் பாகம் தூண் போன்று உயரமாக இருப்பதால் நெடுமாலாகிய விஷ்ணுவைக் குறிக்கும்.

தண்டுக்கு மேலேயுள்ள எண்ணெய் வார்க்குமிடமாகிய அகல், கங்கையைச் சடையுள் வைத்த சிவனை ஒக்கும்.

திரி எரிவதற்குரிய மூக்குகள் ஐந்தும், ஐம்முகமுடைய மஹேஸ்வரனை ஒக்கும்.

அகலின் மேல் கும்பக்கலசம் போன்ற உச்சிப்பாகம் சிவலிங்கம் போலிருப்பதால், சதாசிவனை ஒக்கும். ஆக ஐந்து தெய்வ வடிவங்களின் (பஞ்சப்ரம்மம்) சின்னமாக அமையும் பெருமையுடையது திருவிளக்கு. எனவே எந்த வடிவத்தில் இறைவனை வழிபட வேண்டினும் திருவிளக்கை அந்தந்த தெய்வ வடிவமாகப் பாவித்து, அதனதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அர்ச்சிக்கலாம்.

4. திருவிளக்கின் சுடரை சிவசோதியாகவே கருதி திருவைந்தெழுத்து (சிவாயநம) முதலிய மந்திரங்களை ஓதி அன்புடன் வழிபட்டு வந்தால் 'விளக்கிட்டார்க்கு மெய்நெறி விளக்குவாய் போற்றி' என்ற சொல்லின் உண்மை புலப்படும்.

Koviloor Digital Library

'சிவ' என்னும் சொல்லுக்கு மங்கலம், கல்யாணம், இன்பம், நன்மை என்ற பொருட்களுண்டு. திருவிளக்கு வழி பாட்டு அர்ச்சனையின் முதல் மந்திரம் 'ஓம் சிவாய நம:' இரண்டாவது 'ஓம் சிவ சக்தியை நம:' என்பவையாம் இவைகளில் முதல் மந்திரம் சூக்குமபஞ்சாட்சரத்தின் திரிபே யாகும். சிவாயை நம: என்றால் சிவசக்தியாகிய தேவிக்கு வணக்கம் இரண்டாவது நாமமும் இந்தப் பொருளிலேயே வருகிறது. சிவமும் சக்தியும் வேறுவேறல்ல. விளக்கும் அதன் ஒளியும் போல, பாலும் அதன் இனிமையும் போல இணை பிரியாதவை. சிவமே சக்தி, ஆதலால் இந்த மந்திரங் களைச் சொல்லி வழிபட்டால், பாவந்தொலைந்து, புண்ணியம் பெருகும், அறியாமை நீங்கி அருளறிவு பெருகும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் பேறும் பெறுவர்.

'சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினைமாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே'.

என்பது திருமந்திரப் பாடல்

'சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாய மொருநாளு மில்லை உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.'

என்பது ஒளவையார் திருவார்த்தை.

'சிவாயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம். நமச்சிவாய என்பது தூலபஞ்சாட்சரம் இரண்டும் சிவனருள் மந்திரங்களே!.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

என்பது திருஞானசம்பந்தர் திருப்பாடல்.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கண்ணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அந்நெறியே சென்றங் கடைந்தவர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சிவாயவே

என்பது அப்பர் பெருமான் திருவாக்கு.

திருவிளக்கு வழிபாட்டில் நாம் நூற்றெட்டு (அஷ்டோத்தரசதம்) மந்திரங்களை ஓதி குங்குமம், மலர்தூவி வழிபடுகின்றோம்.

இந்த நூற்றெட்டு அர்ச்சனை மந்திரங்களும் பராசக்தி தேவியின் பெயர்களாயமைந்துள்ளன. அவைகளில் சில நாமங்களின் பொருளை இங்கு சிந்திப்போம். பொருள் தெரிந்து மந்திரங்களை ஓதினால் பலன் எளிதில் கை கூடும்.

முதன் முதலில் 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தின் பொருளே சற்று ஆராய்வோம். 'ஓம்' என்பது, இறைவனது முழுமையான முதற்பெயர். இறைவன் நீராவி போல் அருவமாகவும் பனிக்கட்டி போல் பல்வேறு உருவங்களாகவும் உள்ளான். அங்ஙனம் இறைவனின் அருவநிலையை வழிபடுவதற்கும், உருவநிலைகளே வழிபடுவதற்கும் உரிய ஒரே மந்திரம் இப்பிரணவ மந்திரமாகும். இது ஆண்டவனது ஒப்பற்ற தனிமந்திரம். உலகப்படைப்பின் ஆதியில்தோன்றிய நாத தத்துவம். இதிலிருந்து தான் விண் முதல் மண் ஈறாகவுள்ள எல்லா பூதங்களும் உலகங்களும் உயிர்வகைகளும் தோன்றியுள்ளன. அது மட்டுமன்றி இவ்வொலி எங்கும் எல்லாப் பொருளிலும் நிறைந்து நிற்கிறது. இது பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் முதல் எல்லாத் தேவர்களுமாயுள்ளது. இம்மங்கலவொலியை எப்போதும் உச்சரிப்பவர்களுக்கு எல்லாத்தடைகளும் துன்பங்களும் நீங்கி எல்லா நன்மைகளுமுண்டாகும். இது ஒலி மட்டுமல்ல இறைவனுடைய திருஉருவமுமாகும். இதைத் தனித்தும் மற்று மந்திரங்களுடன் சேர்த்தும் உச்சரிக்கலாம்.

5. நூற்றெட்டு அர்ச்சனையின் பின் நூற்றெட்டுப் போற்றி நாமங்கள் வருகின்றன. அவைகள் யாவும் நமது

Koviloor Digital Library

தேவாரத் திருமுறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற அருள் வார்த்தைகளாம். இவைகளையும் பக்தியோடு ஓதினால் உள்ளம் தூய்மையுற்று இறையருளை எளிதில் பெறலாகும்.

6. திருவிளக்கு வழிபாட்டில் முதலில் 108 (அஷ்டோத் தரசத) சம்ஸ்கிருத நாமாவளிகளைச் சொல்லி அர்ச்சிக்கிறோம். இவ்வர்ச்சனை மந்திரங்களை, குரு அல்லது பூசை நடத்துபவரிடமிருந்து சரியாக உச்சரிக்க கற்றுக் கொள்ள வேண்டும். மந்திரங்களை ஓதுவதில் பிழை இருக்கக் கூடாது. நமது பெயரை பிழைபட அல்லது அரைகுறையாகச் சொல்லி யாராவது அழைத்தால் நமக்கு வருத்தம் ஏற்படுகிறதல்லவா? அப்படியழைப்பது முறையாகுமா? அதுபோல, அல்லது அதை விட மேலாக, குறைவிலா நிறைவாகிய இறைவனை யும் பிழையறப் பரவ வேண்டும். மந்திரங்கள் சரியாக உச்சரிக்கப் பெற்றால் அதிலிருந்து கிளம்பும் ஒலி அலைகள் சிறந்த பலனை விரைவில் தரும். மேலும் மந்திரமும் அதற்குரிய தேவதையும் (இறைவனும்) பிரிக்க முடியாத வையாகும். ‘வேத மந்திர சொரூபன்’ என்று ஸ்ரீ அருணகிரிநாதர் முருகக்கடவுளை அழைக்கிறார். மந்திரங்கள் சரியாக, முறையாக உச்சரிக்கும் இடத்திலே இறைவனது அருள் தோற்றம் உண்டாகிறது. அந்த இடம் அருளாற்றல் உடையதாக மாறுகிறது. மந்திரங்களை காதலாகிக் (பேரன்பு) கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் உள்ளமும், பாவக்கறைகள் நீங்கப் பெற்று தெய்வக் கோயிலாக மாறுகிறது. அவ்வுள்ளம் எண்ணியவெல்லாம் எளிதில் நிறை வேறுகின்றன. ஆதலால் கோயில்கள் தோறும் கோதையர்கள் ஒன்றுகூடி பக்தியுடன் நாமங்களை ஓதி திருவிளக்கு வழிபாடு செய்து, இறையருளுக்கு உரியவராகுங்கள்.

பதினான்கு வயதிலேயே பரந்தாமனோடு இரண்டறக் கலந்த ஆண்டாள் நாச்சியார் ‘தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது, வாயினாற்பாடி மனத்தினாற் சிந்திக்க’ என்று பூசை செய்யும் முறையை நமக்குச் சுருக்க மாகச் சொல்கின்றார். ‘தூயோமாய்’ என்றசொல் மிகவும்

Koviloor Digital Library

கவனிக்கத் தக்கது. தூய்மை அல்லது சுத்தம் இருவகைப் படும். அகத்தூய்மை, புறத்தூய்மை. 'புறத்தூய்மை நீரான் அமையும், அகத்தூய்மை, வாய்மையாற் காணப்படும்' என்ற தமிழ் மறையின்படி புறச்சுத்தம், தண்ணீரில் குளிப்பது தூய ஆடை அணிதல் முதலியவற்றால் உண்டாகிறது. உள்ளத்தூய்மை என்பது உண்மை, நேர்மை, கற்பு தன்னடக்கம், இரக்கம், இன்சொல் பொறுமை, சோம்ப லின்மை, உழைப்பு முதலிய ஒழுக்கத்தால் ஏற்படுவது. தூய ஒழுக்க நெறி நின்று, அதனால் மனம் தூய்மை ஆனவர்கள் செய்யும் பூசை உடனே பலனைத்தரும், பகவானது அருளைத்தரும்.

7. ஆதலால் திருவிளக்கு வழிபாடு செய்யும் மங்கை யர் அனைவரும் தங்கள் நல்லொழுக்கத்திலும் கவனம் செலுத்த வேண்டும். மங்கையரின் பிறப்பு மாண்புடையது என்று ஆன்றோர் கூறுவர். எத்தகையப் பெரியவராயினும் அவரது முதற்குரு அவரைப் பெற்றெடுத்த தாயேயாகும். மேலும் 'நூலைப் போல சேலை, தாயைப் போல பிள்ளை' என்பது பழமொழி ஆதலால் சிறந்த குழந்தை கள் உருவாக வேண்டுமேல் தாயார் சிறந்தவளாயிருத்தல் வேண்டும். கற்பென்னும் மனவடக்கம் மனைவியினிடத்தி லிருக்குமேல் அவளை விடச் சிறந்ததொரு செல்வம் அல்லது பேறு ஒருவனுக்கு அல்லது ஒரு குடும்பத்திற்கு மற்றொன்றில்லை எனத் தெய்வப்புலவர் கூறுவார். 'பெண்ணுற் பெருந்தக்கயாவுள, கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்.' ஆனால் தற்கால சாபக் கேடாகிய ஆபாசத் திரைப்படக் காட்சிகளைக் கண்டுகளிக்கும் மங்கையருக்குத் தங்கள் கற்பு நெறியை எந்த அளவிற்குக் காக்க முடியும் என்று சொல்ல முடியாது. மேலை நாட்டு நடை உடை பாவனைகளை நமது புண்ணியப் பாரதத் தாய்மார்கள் முழுக்கமுழுக்கப் பின்பற்றலாகாது. பெண்ணிற்கு விடுதலை வேண்டும். அதற்கும் ஒரு எல்லை உண்டு. 'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு' ஆகிய நான்கு

Koviloor Digital Library

அருங்குணங்களால் பெண் தனது கற்பைக் காக்க வேண்டுமென்பர். தமக்குரிய ஆண்களின் துணையின்றி, தனி வழி நெடும் பயணம், வேற்று ஆண்களின் கூட்டுறவு முதலிய செயல்களில் ஈடுபடுதல் கூடாது என்பதையே அச்சம் என்ற சொல் காட்டுகிறது. 'மடம்' என்பது சில விஷயங்கள் தனக்குத் தெரிந்திருந்தாலும் வேற்று ஆடவர் முன் அவசியமின்றி அத்திறமைகளைக் காட்டிக் கொள்ளல் கூடாது என்பதாம். 'நாணம்' என்பது மெல்லிய அழகிய தனது மேனியைப் பிறர் கண்டு களிக்காதவாறு ஆடைகளில் மறைத்து நடத்தல் முதலியவை. இந்தியத் தாய்க்குலத்திற்குப் பரம்பரை யாகவே இருந்து வந்த இந்தச் சிறந்த பழக்கம் இப்போது அடியோடு ஒழிந்து விட்டது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. பயிர்ப்பு என்றால் பிற ஆடவரைத் தொடுவதில் உண்டாகும் அருவருப்பு. தன் கணவனல்லாத பிற ஆடவரின் பரிசம் பெண்கள் மேல் படலாகாது. அழகு என்பது நற்குண நற் செய்கையைப் பொறுத்ததாகும். மேனி அழகை மட்டும் குறிப்பதல்ல. மேனி அழகு எத்தனை நாள் தங்கும்? நற்குண நற்செய்கை ஒருவரை பல பிறவிகளில் உயர்ந்து சிறக்கச் செய்யும், பிறவா நிலையையும் தரும்.

'குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல-நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.'

என்ற அற்புதமான தமிழ்ப்பாடல் இக்கருத்தை அழகுற விளக்குகிறது. குஞ்சி என்றால் கொண்டை 'கொடுந்தானைக் கோடு' என்றால் புடவை (ஆடை) யின் சித்திரவண்ணம் 'மஞ்சள் அழகு' டாய்லட் பவுடர் முதலியவைகளின் அழகு இவைகளெல்லாம் ஒரு பெண்ணிற்கு உண்மையான அழகையோ, பெருமையையோ தரா. ஆனால் அவர்களுடைய மனச்சாட்சிக்கு வஞ்சகமில்லாது அவர்கள் நல்லவர்களா யிருப்பின் அதுவே அவர்களுக்கு அழியாத அழகாகும் என நமது முந்தையோர் கூறினர். அவ்வழியை மறவாது இகழாது தற்காலத் தாய்மார்களும் செல்வார்களாயின் மாதா மாதம் அவர்களுக்காக ஒரு மழை பெய்யும். அவர்கள் 'பெய்' யென்றால் மழைபெய்யும் என்பார் வள்ளுவர்.

Koviloor Digital Library

'தெய்வந் தொழாஅள் கணவன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

மேலும், பெண்கள் தங்கள் கணவரின் வருவாய்க்குத் தக்கவாறு சிக்கனமான, ஆடம்பரமற்ற வாழ்வுவாழ வேண்டுமென்று வள்ளுவர் விரும்புகிறார்.

'மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.'

'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி,' 'கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை' என்ற பழமொழிக்கிணங்க அன்பும் அறிவுமுடைய கணவனது சொல்லை மீறாமலும் குறிப்பறிந்தும் நடப்பது கற்புடைய காரிகையர்க்கழகு. கணவனுடையவும் குடும்பப் பெரியோர்களுடையவும் விருப்பமும் அனுமதியுமின்றி பெண்கள் வெளியே உலாவி வருவது நன்றல்ல. தீய ஒழுக்கங்களுடைய பெண்களின் கூட்டுறவோ, அவர்களிடம் அவசியமின்றி பேசுவதோ கூடாது. வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு, அரட்டை அடிக்காமல், ராமாயணம், பாரதம், ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் முதலிய தெய்வ நூல்களை வாசித்தல் நலம். காலை மாலை குழந்தைகளுடன் தானும் உட்கார்ந்து திருவிளக்கின் முன் பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

திருவள்ளுவர் தன் மனைவியாகிய வாசுகி அம்மையார் மறைந்ததும் மனம் மிக வருந்தி ஒரு பாடல் பாடினார்-அது

'அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொல் தவறாத பாவாய்-அடிவருடி
பின்தூங்கி முன்னெழும் பேதையே போதியோ
என் தூங்கும் என்கண் இரா.'

அதன் பொருள்: 'எனக்குகந்த உணவு வகைகளை அறிந்து இனிமையாகச் சமைத்து அளிப்பவளே, என்மீது உண்மை அன்புடையவளே, என் சொற்படி நடந்தவளே, நான் களைப்புடன்

Koviloor Digital Library

தூங்கப் போகும்போது என் கால்களை மெல்ல வருடுபவளே, நான் தூங்கிய பின் நீ தூங்கி, நான் துயிலெழுவதன் முன் நீ எழுந்து வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தவளே, நீ போன பின் எனக்கு எங்ஙனம் நிம்மதி உண்டாகும்?' என்று தெய்வப் புலவரே சிந்தை நைகின்றார். ஒரு பெண் மேற்சொன்ன கற்பரசி வாசுகி அம்மையாரைப் போல வாழ முயலல் வேண்டும். அதுவே இந்திய நாட்டுப் பெண்ணின் பண்பு. சீதை, சாவித்திரி, தமயந்தி, நளாயினி, கண்ணகி, திலகவதியார் போன்ற கற்பரசிகளின் வரலாறுகளைக் கற்று, அவர்களின் வழிவந்தவர் நாமென்று பெருமிதங் கொள்ள வேண்டும்; அவர்களைப் பின்பற்றி வாழ முயல வேண்டும்.

'மேலை நாடுகளில் பெண்களை வெறும் சிற்றின்பப் பொருளாக, அதாவது மனைவியாக மட்டும் கருதுகிறார்கள். கீழை நாடாகிய நமது பாரதத்தில் பெண்ணைத் தாயாக, குடும்பத் தலைவியாகக் கருதி பெருமைப்படுத்துகிறார்கள்.' பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தற்காலத்தில் தனது மனைவியுட்படயெல்லாப் பெண்களையும் பராசக்தியின் வடிவங்களாகவே கண்டு அதற்கிணங்க வாழ்ந்தார். பெண்மையைப் பெருமைப் படுத்தினால் எளிதில் பராசக்திதேவியின் அருளைப் பெறலாம் என்பது உண்மை. ஆனால் தற்காலத்தில் திரைப்படக்காட்சிகள், சிறுகதைகள், நாவல்கள், பத்திரிகைகள் பெண்மையைச் சிறுமைப் படுத்தி அவர்களது கற்பொழுக்கத்திற்குப் பெரிதும் ஊனம் விளைவிக்கின்றன. இது சமூக முன்னேற்றத்திற்குப் பெரும் ஆபத் தாக வந்துள்ளது. நாட்டிற்கு நல்ல அணிகலன்களாக விளங்கும் நன்மக்களை, மாண்புடைய மங்கையர்கள் தாம் பெற்று வளர்த்துத் தர முடியும்.

'மங்களமென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு' என்பது குறள்

முடிவாகப் பெண்கள் ஒய்வு நேரங்களில் தாங்கள் வாழும் ஊருக்கும் நாட்டிற்கும் பல நற்பணிகளைச் செய்ய முடியும். மாதர் மன்றங்கள் அமைத்து ஆலயந்தோறும் திருவிளக்குப் பூஜைகள் நடத்த ஏற்பாடு செய்தல், உழைப்போரின் குழந்தைகளுக்கான காப்பகங்கள் நடத்துதல், மாணவருக்கென சமய வகுப்புகள் நடத்துதல், அந்தர்யோகங்கள், பஜனைக் குழுக்கள், சத்சங்கங்கள்

Koviloor Digital Library

ஆகியவை நடத்துதல் போன்ற நற்பணிகள் அவர்களால் செய்ய முடியும். 'புதுமைப்பெண்' கூறுவதாக மகாகவி பாரதியார் கூறுவார்.

'சாதம் படைக்கவும் செய்வோம்-தெய்வச்
சாதி படைக்கவும் செய்வோம்'

என்றபடி சமூக நலனுக்காகத் தாய்மார்கள் உழைக்கலாம். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான சிறு கைத்தொழில்களான கூடை பின்னுதல், துணி பின்னுதல், தையல் வேலை, தீப்பெட்டித் தொழில் முதலியவைகளையும் ஓய்வு நேரங்களில் செய்யலாம், செய்விக்கலாம்.

இவ்வாறு கருமயோக, பக்தியோக, ஞானயோக வழிகளில் வாழ தாய்க்குலத்தைத் தூண்டுவதே இத்திருவிளக்கு வழிபாட்டின் நோக்கம்.

உலகன்னையின் வடிவங்களாகப் பெண்கள் விளங்குகிறார்கள் என்ற உணர்வைப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஏற்படுத்துவதற்காக உழைப்போமாக!



Koviloor Digital Library

பாரதப் பெண்மணிகள் பற்றி சுவாமி விவேகானந்தர்

1. பாரத சமுதாயத்தின் இலட்சியமாக விளங்குபவர்கள் இராமரும், சீதையும். எல்லாக் குழந்தைகளும் சிறப்பாக சிறுமிகளும் சீதையை வழிபடுவார்கள். தூய்மையாய்ப் பக்தி பூண்டு சீதை போல இருக்க விழைவதே ஒரு பெண்மணியின் உயர்ந்த பேரவா. துன்பத்தைத் தாங்கி இருக்கும் தன்மைக்கு ஓர் இலக்கியமாக பாரத இனத்திற்கு சீதை விளங்குகிறாள். சீதை இயல்பாலே ஓர் உண்மையான இந்தியப் பெண்மணி, அவள் என்றும் இன்னாசெய்தாரை ஒறுத்தது இல்லை.

2. சாவித்திரி : இந்தியாவின் ஒவ்வொரு பெண்மணியும் சாவித்திரியைப் போல இருக்க அவாவ வேண்டும். சாவித்திரியின் அன்பைச் சாவும் வெல்ல முடியாததாயிற்று. பேரன்பினால் தான் அவள் தனது கணவனது ஆன்மாவையே யமனிடமிருந்தும் மீட்டாள்.

3. பெண்ணினம் மகிழுமாறு எங்கே போற்றப்படுகிறதோ அங்கு வாழும் குடிகள் தேவதைகளை ஒத்ததாகின்றனர் என்று மனு மகிழ்ந்து உள்ளார்.

4. இன்றும் புனித பாரத மண்ணிலே சீதையும், சாவித்திரியும் விளங்கிய இப்பொன் நாட்டிலே இம்மங்கையர் பூண்டொழுகுகிற அதே அளவு குணம், அதே அளவு சேவை உள்ளம், ஆறாக்காதல், அன்பு, ஆதுரம், ஆத்மதிருப்தி, பக்தி இவை அனைத்தையும் உலகத்தில் எந்த மூலையிலும் காண முடியாத அளவிற்குக் காணலாகும்.

5. இந்தியாவில் இலட்சியப் பெண்மணி தாய். அன்னையே முன்னறி தெய்வம். அறுதியாக அறியப்படுவதும் அன்னையே, பெண் என்ற சொல் அதனைக் கூறுபவனின் எண்ணத்திலே தாய்மையையே ஞாபகப்படுத்துகிறது. ஆண்டவனையே இந்தியர்கள் அன்னை என்று அழைக்கின்றனர்.

6. சமயம், கலைகள், விஞ்ஞானம், குடும்ப நிர்வாகம், சமையல், தையல், ஆரோக்கிய சாஸ்திரம் இவைகளில் அடங்கியுள்ள முக்கியமான எளிய அம்சங்களை நம் மங்கையர்க்குக் கற்பிக்க வேண்டும்.

Koviloor Digital Library

பண்பாட்டுத் துறையில் கேந்திரம் ஆற்றும் பணிகள்

1. சுமார் 500 கிராமங்களில் வாரந்தோறும் பண்பாட்டுப் பயிற்சி வகுப்புக்கள் - 13,000 - மாணவர்கள் பயில்கிறார்கள்.
2. மாதந்தோறும் சுமார் 450 கிராமங்களில் திருவிளக்குப் பூஜை - 12,000 - சகோதரிகள் பங்கேற்கிறார்கள்.
3. ஒவ்வொரு ஆண்டும் 120 பண்பாட்டுப் போட்டிகள், வகுப்புக்கள் - 1 முதல் 10 வரை, மேனிலை வகுப்பு, கல்லூரி நிலை.
4. மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் பண்பாட்டுப் பயிற்சி வகுப்புக்கள் - முகாம்கள்.
5. சுவாமி விவேகானந்தரின் உபதேசங்களைத் துண்டுப் பிரசுரமாக விநியோகித்தல்.
6. வீட்டுக் கதவுகளில் ஓம் படம், சுவாமிஜியின் படம் ஒட்டுதல்.
7. நன்னூல்களை எழுதி வெளியிடுதலும், விற்பனையும்.
8. விவேகவாணி, கேந்திரப் பத்திரிகை, யுவபாரதி முதலிய பத்திரிகைகளை வெளியிடுதல்.
9. கீதை வகுப்புக்கள் நடத்துதல்.
10. கோயில் திருவிழாக்களில் சொற்பொழிவுகள்.
11. திரைப்படம், படப்பெட்டி, கண்காட்சிகள், நாடகங்கள் இவற்றின் மூலம் கிராமப்புற மக்கட்கு நல்லுணர்வு ஊட்டுதல்.
12. அகண்டநாம ஜபம், பாராயணம் ஆகியன நடத்துதல்.